**தலைப்பு 268 – கிளிநொச்சி மாவட்ட செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளையும் அவதானிப்புக்களையும் உள்ளடக்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 21 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்டச் செயலகம் தொடர்பான விரிவான வருடாந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 ஆகஸ்ட் 15 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
லங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயன்முன்னேற்றம் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக பேணுவதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி மாவட்ட செயலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்டுள்ள கட்டுநிதி கணக்கு கூற்றிலுள்ள கட்டுநிதி பெறுவனவுகள் மற்றும் தீர்ப்பனவு மீதிகளிற்கும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரமான அத்தகைய மீதிகளிற்கும் இடையே ரூபா 7,150,000 வேறுபாடுகள் இருந்தன. | திறைசேரி ரூபா 7,150,000 தொகையை வரவு வைத்து அதே நேரத்தில் அதனை செலவு வைத்ததால் மாவட்ட செயலகம் கூற்றில் உள்ளடக்கவில்லை. | திணைக்கள புத்தகங்களில் உள்ள மீதிகள் திறைசேரி கணனி அச்சீட்டுத்தாள் மீதிகளுடன் ஒப்பிடப்பட்டு கணக்குகளில் பதிவு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | நிதி செயலாற்றல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானமல்லாத வைப்பு பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் பெறுமதிகளை திறைசேரி கணனி அச்சீட்டுத் தாள்களின் பிரகாரம் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகளின் பெறுமதிகளுடன் ஒப்பிடும் போது ரூபா 1,181,666 வேறுபாடு காணப்பட்டது. | மாகாண சபையின் வருமான பெறுவனவுகள் மற்றும் பிரதேச செயலகங்களால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகள் திறைசேரி கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்காலத்தில் சரியாக செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

### 1.6.2 கணக்காய்விற்கான சான்றின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் தொடர்பான ரூபா 23,560,715 தொகையான 74 கொடுப்பனவுகள் சிட்டைகள், பயனாளிகளின் பட்டியல்கள், கொள்வனவு கட்டளைகள், வழங்குநர் விபரங்கள், வேலை பூர்த்திசெய்தல் அறிக்கைகள், | காகிதாதிகள் இல்லாததால் உரிய ஆவணங்கள் மற்றும் அறிக்கைகள் இணைக்கப்படவில்லை. தற்போது அவை இணைக்கப்பட்டு, கோவைகளில் தொடர்பு | கொடுப்பனவின் போது அதற்கான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| கைவிரல் அடையாள இயந்திர குறிப்புக்கள், வருகைப் பதிவேடுகள், வாகன பரீட்சிப்பு அறிக்கைகள் போன்றன சமர்ப்பிக்கப்படாததால் கணக்காய்வின் போது அக் கொடுக்கல்வாங்கல்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியவில்லை. | இலக்கங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 04 மூலதனச் செலவின விடயங்களின் தேறிய ஒதுக்கீட்டில் 14 சதவீதம் முதல் 61 சதவீதம் வரையான வீச்சில் சேமிப்புக்கள் இருந்தன. 10 மீண்டெழும் செலவின விடயங்களின் சேமிப்புக்கள் தேறிய ஒதுக்கீட்டில் 09 சதவீதத்திற்கும் 49 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் இருந்தன. மேலும், 02 செலவின விடயங்களில் ரூபா 750,000 நிதியேற்பாடு முழுமையாக சேமிக்கப்பட்டது. | தொற்றுநோய் நிலைமை காரணமாக கணனி மென்பொருள் அபிவிருத்தி நடவடிக்கைகளை அமுல்ப்படுத்த முடியவில்லை. | மதிப்பீடுகள் சரியாக திட்டமிடப்பட வேண்டும். |
| (ஆ) | 05 மூலதனச் செலவின விடயங்களின் மொத்த தேறிய ஒதுக்கீட்டில் நாற்பத்தி இரண்டு சதவீதம் அல்லது ரூபா 3,412,787 தொகை சேமிக்கப்பட்டது. | தொற்றுநோய் சூழ்நிலை காரணமாக நிர்மாணம், பணியாளர் வருகை மற்றும் வாகன ஓட்டம் குறைவடைந்ததன் காரணமாக சேமிப்புக்கள் ஏற்பட்டன. | மூலதன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை மேற்கொள்வதில் அத்தியாவசிய தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். |

### 2.2 முற்பணத்தை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஓய்வுபெற்ற மற்றும் இடைநிறுத்தம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 1,147,050 தொகை 11 ஆண்டுகளுக்கும் மேலாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவையாக உள்ள கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | நிலுவை மீதிகளை உடனடியாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஒரு செலவின விடயத்தில் உள்ள ரூபா 715,000 பொறுப்புக்கள் நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பற்றிய கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இத்தொகைகள் பிரதேச செயலகங்களில் கைகளிலுள்ள விலைப்பட்டியல்களாகும். நிதியேற்பாடுகள் இல்லாததால் அவை பொறுப்புக்களாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் செய்யப்பட்ட ரூபா 3,156,060 பணிகளுக்கு நிதி கிடைக்காததால் கொடுப்பனவுகளை மேற்கொள்ள முடியவில்லை, ஆனால் அவை நிதிக்கூற்றுக்களில் பொறுப்புகளாக காட்டப்படவில்லை. | ஏனைய திணைக்களங்களின் மூலதன நிகழ்ச்சித்திட்டங்களுக்கான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களாக ரூபா 1,613,000 தொகை காட்டப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூபா 1,543,060 தொகை மீண்டெழும் செலவினங்களாகும். | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

### 2.4 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் மேற்கொள்ளப்பட்ட நிதியேற்பாடுகளை பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது 48 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிடமிருந்து பெறப்பட்ட ரூபா 1,182 மில்லியன் ஒதுக்கீட்டில், ரூபா 41 மில்லியன் அல்லது 3.5 சதவீத ஒதுக்கீடு சேமிக்கப்பட்டது. | ஒதுக்கீட்டின் பெரும்பகுதி பயிற்சி கற்கைநெறிகள் மற்றும் செயலமர்வுகளுக்காக காணப்பட்டது. தொற்றுநோய் காரணமாக அந்தப் பணிகளைச் செய்ய முடியவில்லை. | நிதி ஒதுக்கீடுகள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

### 2.5 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக இலகுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த | இது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் என்பதனை தங்களிற்கு தெரிவித்துக் கொள்கிறேன். | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையினை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்களை செய்ய வேண்டியதுடன் அம்மீளாய்வுகள் எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதாக கூற்றொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படடிருக்கவில்லை.

**2.6 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காணி அபிவிருத்தி சட்டத்தின் 464 ஆம் அத்தியாயம் 19(2) ஆம் பிரிவுக்கு முரணாக 2014 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட 702 காணி அனுமதிப் பத்திரங்கள் 2022 மார்ச் வரை உரிய பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் கரைச்சி பிரதேச செயலகத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | உரிய கிராம உத்தியோகத்தர்கள் மூலம் அவர்களிற்கு அறிவிக்கப்பட்டு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**2.7 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 137 இற்கு முரணாக, முறையான அங்கீகாரமின்றி மாவட்ட செயலகத்தால் ரூபா 247,178 இற்கான 04 கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | தவறுதலாக அங்கீகாரம் பெறப்படவில்லை. தற்போது இது சீர்செய்யப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**2.8 கட்டுநிதிகளை வழங்குதலும் தீர்ப்பனவு செய்தலும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்டவாறு நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் பெறப்பட்ட | எதிர்காலத்தில் இதுபோன்ற தவறுகள் இடம்பெறாமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறு உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உபகட்டுநிதிகள் சம்பந்தப்பட்ட பணி பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும் 20 சந்தர்ப்பங்களின் போது ரூபா 226,250 தொகையான உபகட்டுநிதி 18 நாட்கள் முதல் 85 நாட்கள் வரையிலான காலதாமதத்திற்குப் பின்னர் தீர்ப்பனவு செய்யப்பட்டது. | | |
| (ஆ) | நெல் கொள்வனவுக்காக 2012 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட ரூபா 700,000 தொகை இது வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அந்த பணம் உடனடியாக அறவிடப்பட வேண்டும். |

**2.9 வைப்பு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிற்கு இடையே மாவட்ட செயலகத்தின் வைப்பு கணக்கில் செலவு வைக்கப்பட்ட ரூபா 1,006,716 தொகையான 08 வைப்புத் தொகைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வைப்பை மீளளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட ரூபா 1,733,451 தொகை ஒரு வருடத்திற்கும் மேலாக தொடர்புடைய நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் வைப்பு கணக்கில் உள்ளது. | வைப்பை மீளளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. | வைப்புக்கள் செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

**2.10 வங்கி கணக்கு செயற்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 7,262,923 கொடுப்பனவிற்காக வழங்கப்பட்ட பதினொரு காசோலைகள் நிதிப்பிரமாணம் 211 | காசோலைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இற்கு முரணாக 2022 யூன் வரை உரிய பங்களிப்பாளர்களிடம் கையளிக்கப்படாமல் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலக அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ளன. | | |
| (ஆ) | கொடுப்பனவு செய்யும் உத்தியோகத்தரால் பங்களிப்பாளரிடம் கையளிக்கப்பட வேண்டியிருந்த ரூபா 5,432,967 பெறுமதியான ஐம்பத்தொன்பது காசோலைகள் நிதிப்பிரமாணங்கள் 260 மற்றும் 389 இற்கு முரணாக சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரிற்கு கையளிக்கப்பட்டன. | உரிய நபர்களிற்கு காசோலைகள் கையளிக்கப்பட்டு வருமானத்திற்கு மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் மாவட்ட செயலகத்தால் கட்டளையிடப்பட்ட பொருட்கள் எதுவும் 2022 மார்ச் வரை பெறப்பட்டிருக்கவில்லை. எனினும், நிதிப்பிரமாணம் 137 இற்கு முரணாக பொருட்களைப் பெறுவதற்கு முன்னர் 2021 ஆம் ஆண்டில் ரூபா 2,344,614 தொகை செலுத்தப்பட்டுள்ளது. | பூநகரி மற்றும் கண்டாவளை பிரதேச செயலகங்கள் 17 காசோலைகளை வழங்குவதற்கு ஏற்பாடு செய்திருந்ததுடன் எஞ்சிய காசோலைகள் குறிப்பிடப்பட்ட நபர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்னர் பணம் செலுத்தப்படக்கூடாது. |
| (ஈ) | மீளாய்வாண்டில் செலவினங்களாகக் கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 18,632,707 கூட்டுமொத்தமான எழுபத்து நான்கு காசோலைகள் மாவட்டச் செயலகம் மற்றும் 02 பிரதேச செயலகங்களால் வைத்திருக்கப்பட்டதுடன் நிதிப்பிரமாணம் 141 மற்றும் 386 இற்கு முரணாக வரைபவரால் காசோலைகளில் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. | 06 காசோலைகள் பணிமிகுதியால் கையொப்பமிடப்பட்டிருக்கவில்லை. தற்போது அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.<br><br>கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக மீதமுள்ள காசோலைகளுக்கு பதில்கள் எதுவும் வழங்கப்படவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | உற்பத்தி ஒத்துழைப்பு செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 13,475,211 தொகையான கட்டிடங்கள் மற்றும் உபகரணங்கள் 03 வருடங்களுக்கு மேலாக விளைவற்றிருந்தன. | ஒரு கூட்டுறவு சங்கம் தவிர வழங்கப்பட்ட அனைத்து உபகரணங்களும் நல்ல பயன்பாட்டில் இருப்பதாக பதில் அளிக்கப்பட்ட போதிலும் அந்த உபகரணங்கள் அனைத்தும் பயன்படுத்தப்படாமல் | சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் விடக்கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| | | காணப்படுகின்றமை பௌதீக பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டது. | |
| (ஆ) | ரூபா 21,552,983 பெறுமதியான 02 பிரதேச செயலக விடுதிகள் (bungalows) ஒரு வருடத்திற்கும் மேலாக விளைவற்றிருந்தன. | தற்போதைய விலைவாசி உயர்வு காரணமாக 02 விடுதிகளை மேம்படுத்துவது சாத்தியமில்லாதிருந்தது. ஆனால் உடனடியாக பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்கள் விளைவற்றிருக்காமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.2 நட்டங்களும் சேதங்களும்**

-----------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 02 பிரதேச செயலகங்களில் அமுல்படுத்தப்பட்ட 03 செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 164,166 தண்டப்பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தொற்றுநோய் நிலைமை, மின் இணைப்பை பெறுவதில் தாமதம் போன்ற காரணங்களால் தண்டப்பண கட்டணங்கள் விதிக்கப்படவில்லை. | தாமத கட்டணங்கள் அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | பளை பிரதேசத்தில் பட்டவளை வீதியை திருத்துவதற்கு தேவையான கிரனைட் மற்றும் மண்ணை கொள்வனவு செய்வதற்காகவும், போக்குவரத்துக்காகவும், வீதியின் இருபுறங்களிலும் வைப்பதற்காகவும் ரூபா 912,822 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பின்னர், அந்த நிர்மாணங்கள் கைவிடப்பட்டதால், பணிகள் பூர்த்தி செய்யப்படாததால், செலவிடப்பட்ட பணம் பயனற்றதாகியிருந்தது. | அந்த ஆண்டினுள் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. தொற்றுநோய் நிலைமை, மூலப்பொருட்களின் விலை உயர்வு மற்றும் மழைக்காலம் போன்ற காரணங்களால் நிர்மாணம் தாமதமாகியது. அடுத்த ஆண்டு வரை காலப்பகுதியை நீடிக்க முடியாததால், மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்காக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டன. | பொது நிதி செயற்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |

**4. மனித வளங்கள் முகாமைத்துவம்**

-----------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட 537 பதவியணி பதவிகளில் 25 வெற்றிடங்களும் 08 மேலதிகங்களும் காணப்பட்டன. | இந்த பதவி வெற்றிடங்கள் இண்மைய எதிர்காலத்தில் நிரப்பப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. | தேவைப்பாடுகளின் பிரகாரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மேலதிக |

| | | | |
|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர்களை செயற்திறனாக பணியிலீடுபடுத்துவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 ஆகஸ்ட் 06 ஆம் திகதிய 01/2021 ஆம் இலக்க ஒருங்கிணைந்த சேவை சுற்றறிக்கை மற்றும் 2021 செப்தெம்பர் 13 ஆம் திகதிய 18/2021 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை ஆகியவற்றிற்கு முரணாக மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் பணிபுரியும் 181 உத்தியோகத்தர்கள் 05 வருடங்களுக்கு மேலாக இடமாற்றம் செய்யப்பட்டிருக்கவில்லை. | 05 வருடங்களுக்கு மேல் சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றத்தை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |